22 DEC 2016
UNIVERSITY

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட/ இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2013/ 2014 (March/2016)

## ECOS 4204 Environmental Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

Q1) அ) பொருளாதாரத்திற்கும், வளங்களுக்கும் இடையிலான தொடர்பிலான உதாரணங்களைக் கையாண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) சூழல் நிர்ணயவாதம் மற்றும் தேர்வு முதன்மைவாதம் என்பனவற்றை வேறுபடுத்தி ஆராய்க.

(13 புள்ளிகள்)

Q2) அ) சூழல் மாசடைதலை ஏற்படுத்தும் செயற்படானது எவ்வாறு சந்தைத் தோல்விக்கு காரணமாக அமைகின்றது என்பதனை ஆராய்க.

(10 புள்ளிகள்)

ஆ) வெளிவாரி விளைவுகளைக் கட்டுப்படுத்தும் முறைகளை ஆராய்க.

(15 புள்ளிகள்)

Q3) அ) எல்லைச் சமூக நலன் (MSB), எல்லைச் சமூகச் செலவு (MSC) எல்லை வெளிவாரிச் செலவு (MEC) என்பனவற்றை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) சூழல் பொருளியலில் மீளப் புதுப்பிக்கப்பட கூடிய மற்றும் மீளப் புதுப்பிக்கப்பட முடியாத வளங்கள் பெறும் முக்கியத்துவங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

Q 4) அ) சனத்தொகை வளர்ச்சிக்கும், வளங்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை உதாரணங்களைக் கையாண்டு ஆராய்க.

(12 புள்ளிகள்)

ஆ) "வளப்பங்கீட்டின் மீதான முரண்பாடுகள் சர்வதேச முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமைகின்றது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(13 புள்ளிகள்)

Q 5) "நீர்வளத்திற்கான போட்டியானது மற்றுமொரு உலக மகா யுத்தத்தை ஏற்படுத்தும் அளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

(25 புள்ளிகள்)

Q 6) சூழல் ஒழுங்கின் தாங்கும் இயலளவு (Carrying capacity of ecosystem) பற்றிய சூழல் பொருளியலாளர்களின் கருத்துக்களை விளக்கி அவற்றினை திறனாய்வு செய்க.

(25 புள்ளிகள்)